அலகு - 7

# கண்டங்களை ஆராய்தல்

## ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா



### கற்றலின் நோக்கங்கள்

- ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, மற்றும் அண்டார்டிகா கண்டங்களின் புவியியல் அமைவிடங்களைக் கண்டறிதல்
- இக்கண்டங்களின் இயற்கையமைப்பு, காலநிலை மற்றும் வடிகாலமைப்பு பற்றி அறிந்து கொள்ளல்
- இக்கண்டங்களின் தாவர மற்றும் விலங்கினங்களின் தன்மைகளைப் புரிந்து கொள்ளல்
- முக்கிய வளங்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை அடையாளம் காணல்
- வரைபட திறனை வளர்த்தல்

EPLMX

### அறிமுகம்

எட்டாம் வகுப்பு ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்த பின் மாணவர்களிடம் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என வினவினார். அதற்கு அவ்வகுப்புத் தலைவன் ஆசிரியரிடம் ஆஸ்திரேலியா மற்றும் தென் ஆப்பிரிக்கா இடையேயான ஒருநாள் மட்டைப்பந்து போட்டி குறித்து மாணவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள் எனக் கூறினான். அதற்கு ஆசிரியர், 'மாணவர்களிடம், சரி இன்று இவ்விரு கண்டங்களைப் பற்றிப் பல விவரங்களை இப்பாடத்தில் கற்போம்' என்று கூறினார்.

### ஆப்பிரிக்கா

#### அமைவிடம் மற்றும் பரப்பளவு

ஆப்பிரிக்கா, ஆசியாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய மற்றும் இரண்டாவது அதிக மக்கட் தொகையைக் கொண்ட கண்டமாகும். இது $37^\circ 21'$ வட அட்சம் முதல் $34^\circ 51'$ தென்அட்சம் வரையிலும், $17^\circ\ 33'$ மேற்கு தீர்க்கம் முதல் $51^\circ\ 27'$ கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது. இதன் பரப்பளவு சுமார் 30.36 மில்லியன் சதுர கிலோமீட்டர் ஆகும். (உலகின் மொத்த நிலப்பரப்பில் 20.2 சதவீதம்). புவிநடுக்கோடு ஆப்பிரிக்காவை இரு சம பாகங்களாகப் பிரிக்கிறது. கடகரேகை, புவி நடுக்கோடு மற்றும் மகரரேகை போன்ற முக்கிய அட்சங்கள் கடந்து செல்லும் ஒரே கண்டம் இதுவாகும். இது வடக்கு தெற்காக 7623 கிலோ மீட்டர் நீளமும், கிழக்கு மேற்காக 7260 கிலோமீட்டர் நீளமும் உடையது. முதன்மை தீர்க்கரேகையான ($0^\circ$) (Prime Meridian) இக்கண்டத்தின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள கானா நாட்டின் தலைநகரான அக்ராவின் அருகில் செல்கிறது. ஆப்பிரிக்க கண்டம் புவியின் நான்கு கோளங்களிலும் பரவியுள்ளது.

சிறந்த கடற்பயண ஆய்வாளர்களான டேவிட் லிவிங்ஸ்டோன் மற்றும் எச்.எம். ஸ்டான்லி ஆகியோர் இக்கண்டத்தின் உட்பகுதிகளை முதன்முதலில் ஆராய்ந்தவர்களாவர். ஆப்பிரிக்காவில் மனிதனின் மூதாதையர்கள் 5 மில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்ததாக ஆதாரங்கள் மூலம் தெரியவருகிறது. புவியில் மனித இனங்கள் வாழ்ந்த பழமையான கண்டம் என்பதால் ஆப்பிரிக்காவானது **'தாய் கண்டம்'** எனப் புனைப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.



VIII_Std_Geography_Unit 7.indd 164 04-03-2023 15:13:11